**OS 37/2021 நாள் 19.12.2022, வாசா1 சாட்சி கண்ணதாசன் மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிதரப்பில் குறுக்குவிசாரணை**

தஞ்சாவூர் சுற்றுவட்டார பகுதிகளில் கட்டுமான பணிகளுக்கு கூலி ஆட்களை அனுப்பும் வேலை செய்கிறேன். அந்த வேலைக்கு அரசாங்கத்தில் பதிவுசெய்துகொள்ளவில்லை. வாசாஆ 1ல் இரண்டு நிற மையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 1கடனுறுதிச் சீட்டை பூர்த்திசெய்தது தாமரைச்செல்வன். கடனுறுதி சீட்டு படிவத்தில் எழுதியது உட்பட என்ற இ,டத்தில் தாமரைச்செல்வனின் கையொப்பம் இல்லை. சாட்சி என்ற இடத்தில் தாமரைச்செல்வனின் கையொப்பம் உள்ளது. வாசாஆ 1 ன் சாட்சிகளின் விவரங்களை வழக்குரையிலோ, முதல்விசாரணை வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். என் அப்பா விவசாயம் செய்கிறார். என் அப்பா இறந்துவிட்டார். எங்களுக்கு சொந்த நிலம் இல்லை. 6 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்து சாகுபடி செய்கிறோம். சொந்த வீடு இருக்கிறது. 6 ஏக்கர் நிலத்தில் நெல் பயிரிட்டால் அதிகபட்சமாக ரூ.1,80,000 நெல் விற்பனை ஆகும் என்றால் சரிதான். அதில் சுமார் ரூ.60000 ற்குள் செலவாகும். நான் அம்மாபேட்டையில் உள்ள இந்தியன் வங்கியில்தான் வரவுசெலவு வைத்துள்ளேன். என்னுடைய நிதிநிலைமையை காட்டுவதற்கு இந்தியன் வங்கியின் கணக்கு விவரத்தை தாக்கல் செய்யவில்லை. எந்த நண்பர்களிடமிருந்து எவ்வளவு தொகை வாங்கி பிரதிவாதிக்கு கொடுத்தேன் என்ற விவரத்தை வழக்குரையிலோ, முதல்விசாரணையிலோ சொல்லவில்லை. என்னுடைய நண்பர்களுக்கு எப்படி பணம் கிடைத்தது என்பதற்கும் விவரங்களை வழக்குரையிலோ, முதல்விசாரணையிலோ சொல்லவில்லை. என் நண்பர்களிடம் பணம் வாங்கியதற்கு நான் கடனுறுதி சீட்டு எழுதித்தரவில்லை. தாமரைச்செல்வன் கடனுறுதி சீட்டு எழுத பயிற்சிபெற்றவரா என்றால் இல்லை. நான் சொன்னதுபோல் பிரதிவாதி என்னிடம் எந்த தொகையும் கடன் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதி வீட்டுவேலை செய்தபோது கூலி ஆட்களை அனுப்பி வேலைசெய்த வகையில் அவருடன் பழகி அவரது வீட்டில் இருந்து ஆவணங்களை எடுத்துகொண்டு

வந்தேன் என்றால் சரியல்ல. வாசாஆ 1ல் கையெழுத்திட்டு இருப்பது பிரதிவாதி அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி வீடு கட்டும்போது எனக்கும் அவருக்கும் சம்பள பிரச்சனை ஏற்பட்டு அதை வசூலிப்பதற்காக எனக்கு வேண்டிய நபர்களை வைத்து வாசாஆ 1 தயாரித்திருக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் காசோலை எதுவும் தரவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் பிரதிவாதி காசோலை கொடுத்திருந்தால் காசோலை திரும்பி வந்தது குறித்து அவருக்கு அறிவிப்பு அனுப்பியிருப்பேன் என்றால் சரியல்ல. வழக்குரையில் வழக்குமூலம் பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றும் உண்மை விவரங்கள் சொல்லாததால் வழக்கு தள்ளுபடி ஆகும் என்றால் சரியல்ல.

பிரதிவாதிவழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/-) A. மலர்விழி,

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.